Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



9

மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொறுப்பு), தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. ர. ராணி, பி.இ.,

ந.க.எண். 1173/2020 தமா, நாள். 19.09.2020.

---

பொருள்: தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தருமபுரி மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - கொண்டகரஅள்ளி ஊராட்சி மற்றும் கிராமம் - ச.எண்கள். 27/2A1,2B2 & 2C–ஆகியவற்றில் 1.58.00 ஹெக்டேர் பரப்பளவுள்ள மனையில் G+2 தளங்கள் கொண்ட Type A-ல் 5 Block-ம் + Type B-ல் 2 Block ஆக 7 பிளாக்குகளில் மொத்தம் 288 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு தொகுப்பு கட்டிடங்கள் கட்ட தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது - தொடர்பாக

பார்வை:
1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் எண்.8/உ.நி.பொ(தி)/2020, நாள். 31.08.2020 மற்றும் 19.09.2020.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னைஅவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 7486/2009/பிஏ2/1 நாள் 16.04.2009.
3. அரசாணை(நிலை)எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள், 04.02.2019
4. அரசாணை(நிலை)எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள், 31.01.2020.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண் 4367/2019/நஊ2 நாள் 31.10.2019.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண் 4367/2019/பிஏ2 நாள் 6.11.2019
7. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 29.11.2018 ( Insisting TNRERA Registration)

---

<u>உத்தரவு</u>

தருமபுரி மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம், கொண்டகரஅள்ளி ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள்.27/2A1,2B2 & 2C–ஆகியவற்றில் 1.58.00 ஹெக்டேர் பரப்பளவுள்ள மனையில் G+2 தளங்கள் கொண்ட Type A-ல் 5 Block-ம் + Type B-ல் 2 Block ஆக 7 பிளாக்குகளில் மொத்தம் 288 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரிய விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் யாவும் பார்வை 1.ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. பார்வை 5.ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் அதிகார பகிர்வின்படி உத்தேச பலகுடியிருப்பு தொகுப்பு கட்டிடத்திற்கு விதிகள் நிறைவு செய்கிறது. உத்தேச மனையிடத்திற்கு <u>'A to L'</u> என எல்லையிட்டு அம்மனை வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ(தமா)எண். <u>73/2020</u> என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

EXECUTIVE ENGINEER
Tami... Board.
... ...em-7

உத்தேச தொகுப்பு கட்டிடம் (Type - A & B)

Type - A-ல் (பிளாக் எண். 1 முதல் 5 வரை - 5 பிளாக்குகள்)

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 589.90 x 5 | 2949.50 | 16X5 =80 |
| முதல் தளம் | 589.90 x 5 | 2949.50 | 16X5 =80 |
| இரண்டாம் தளம் | 589.90 x 5 | 2949.50 | 16X5 =80 |
| மொத்தம் | | 8848.50 | 240 |

Type - B-ல் (பிளாக் எண். 6,7 - 2 பிளாக்குகள்)

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 295.54 x 2 | 591.08 | 8X2 = 16 |
| முதல் தளம் | 295.54 x 2 | 591.08 | 8X2 = 16 |
| இரண்டாம் தளம் | 295.54 x 2 | 591.08 | 8X2 = 16 |
| மொத்தம் | | 1773.24 | 48 |

**Total Built up area (FSI area) = 8848.50 +1773.24 = 10621.74 Sq.m.**
**(Type A + B)**
**Total No. of Units = (240 + 48) = 288**
**Park I & II (OSR) Area = 1603.77 Sq.m.**

மேற்கண்ட பரப்பளவுடன் கூடிய உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு கீழக்காணும் சிறப்பு நிபந்தனைகள், நிபந்தனைகளுடன் கட்டிட வரைபடத்திற்கு க.வ/மா.ந.ஊ.அ(தமா)எண். 40அ.ஆ.இ/2020 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்பதல் அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) இட அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வரிசைஎண். 1 முதல் 5 வரை & 6 முதல் 10 வரை உள்ள Park I&II (OSR) ஒதுக்கீட்டிற்கான மொத்த பரப்பு 1603.77 ச.மீ. (1172.95 ச.மீ. + 430.82 ச.மீ.) பரப்பளவு இடத்தினை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் அவர்கள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும். தானபத்திர நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு தொழிலநுட்ப அனுமதி மட்டுமே நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்படுகிறது. கட்டிட உறுதித் தன்மை குறித்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் எவ்வித விதிகளோ நெறிமுறைகளோ வகுக்கப்படவில்லை, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட உத்தேச கட்டுமானத்தின் உறுதித்தன்மைக்கு கட்டிட உரிமைதாரர்கள், சம்மந்தப்பட்ட பொறியாளர், கட்டிடக்கலை வல்லுநர் உரிமம் பெற்ற அளவையாளர் மற்றும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பு ஆவர்.

**EXECUTIVE ENGINEER**
**Tamil Nadu Slum Clearance Board,**
Salem Division, Salem-7

3) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

4) 'நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி. கட்டிட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப பத்திரம் மற்றும் பட்டா, மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

'சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

5) மனையிடத்தின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின் கம்பி பாதையினை உத்தேச சாலையின் போக்கில் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தால் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

6) மனையிடத்திலுள்ள பழைய கட்டிடங்களை இடித்து அகற்றப்பட வேண்டும்.

7) This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019"

8) நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கையின்படி,
"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Act 2016, The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate regulatory Authority."

நிபந்தனைகள்-

1) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனள்ளதாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

V. [signature]

**EXECUTIVE ENGINEER**
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.135, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) கட்டிமுடிக்கப்பட்ட மற்றும் கூடுதல் உத்தேசம் கொண்ட கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறுஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்.03.11.2004-ன் படிசெப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10)சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS & Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ( உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12)உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25(Water Act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் பெறப்பட வேண்டும்.

13)அரசாணை நிலை எண்.17 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை நாள்.15.2.2016-ன் படி Solar Panel பொருத்துவது தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

14) உத்தேச மனையிடத்தில் கட்டுமானம் நடைபெறும் சமயம் பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாத வண்ணம் கட்டுமானம் பகுதியினை சுற்றி பாதுகாப்பு அரண் அமைத்து கண்காணிக்கப்பட வேண்டும்.

15) கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

**EXECUTIVE ENGINEER**
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

16) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டடத்திற்கு பார்வை 2ல் கண்டுள்ள நகர ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி நன்விலைவரியாக தொகை ரூ.29,100/- (ரூபாய் இருபத்தொன்பதாயிரத்து நூறு மட்டும்) அரசு கணக்கில் உரிய தலைப்பில் அன்று .09.2020 நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் அவர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்கும்படி ஊராட்சிமன்றத் தலைவர், கொண்டகரஅள்ளி ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்கள் கட்டிட அனுமதி பெற ஊராட்சி மன்றத் தலைவர், கொண்டகரஅள்ளி ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

19/9/2020

ஒ/ப உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
19/9/20 தருமபுரி மாவட்டம்.

இணைப்பு
முத்திரையிடப்பட்ட வரைபடம் 2 தொகுப்பு

பெறுநர்
ஊராட்சிமன்றத் தலைவர்,
கொண்டகரஅள்ளி ஊராட்சி,
தருமபுரி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
— உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள்.

நகல்
1.நிர்வாகபொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம்,
சேலம் கோட்டம். — உத்தரவு கடிதம் மட்டும்.

2.தொழில்நுட்ப வைப்பறை. — உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம்.

AEE

V. Prakash
EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

ஊராட்சி கட்டிட அனுமதி உத்திரவு

கொண்டகரஅள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.சி.தங்கராஜ்,

அனுமதி எண்.2/2020/ஊ.ம. அலுவலகம் நாள் 10.2020.

பொருள்: ஊராட்சி கட்டிட அனுமதி - தருமபுரி மாவட்டம் - தருமபுரி ஊராட்சி ஒன்றியம் - கொண்டகரஅள்ளி ஊராட்சி - கொண்டகரஅள்ளி கிராமம் - தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதியளித்தல் - தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 242 உட்பிரிவு 2 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள் 1997 மற்றும் துணை விதிகள்
2. அரசாணை எண்.285 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 18.06.1997 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 110.AA
3. தருமபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொறுப்பு) தருமபுரி அவர்களின் நடவடிக்கை ந.க.எண்.1173/2020/தமா, நாள் 19.09.2020.
4. இளநிலை பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் உப கோட்டம்-III, நாள் கடித நாள் 29.09.2020.
5. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் உப கோட்டம், கடித எண்.3287/அளவை/2019, நாள் 24.01.2020.
6. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22069/2019/ஆதிந/கொ-1, நாள் 17.02.2020.
7. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம், கடித எண்.8/உ.நி.பொ(தி)/2020, நாள் 23.10.2020.

ஓஓஓஓ

உத்திரவு:-

தமிழ்நாடு 1994-ம் வருடம் ஊராட்சி சட்டம் 1994 பிரிவு 2(சி) அரசு ஆணை எண். 225 18.08.1997 மற்றும் பார்வை 1 மற்றும் பார்வை 2-ல் காணும் அரசாணை மற்றும் விதிகளின்படி, கொண்டகரஅள்ளி ஊராட்சி ஒன்றியம், கொண்டகரஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட கொண்டகரஅள்ளி கிராமத்தில் சர்வே எண். 27/2A1, 27/2B2 மற்றும் 27/2C-ல் மனை எண். NIL-ல் பார்வை 6-ல் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படியும், பார்வை 4-ல் காணும் கடிதத்தின்படியும், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. மனுதாரர் பெயர் | : | நிர்வாக பொறியாளர் TNSCB |
| 2. சர்வே எண். | : | 27/2A1, 27/2B2 மற்றும் 27/2C |
| 3. மனை எண். | : | NIL |
| 4. மனையின் பரப்பளவு | : | 1.58.0 ஹெக்டேர் |
| 5. கட்டிடத்தின் தன்மை | : | தார்சு கட்டிடம் |
| 6. தளம் | : | தரை தளம் மற்றும் முதல் தளம் இரண்டாம் தளத்துடன் கூடிய Type A-ல் 5 Block-ம் + Type B-ல் 2 Block ஆக 7 பிளக்குகள். |
| 7. மொத்த வீடுகள் | : | 288 |
| 8. கட்டிடத்தின் பரப்பளவு | : | 10621.74 ச.மீ. |
| 9. மதிப்பீட்டுத் தொகை | : | ரூ.28,05,60,000/- |
| 10. LWF தொகை | : | ரூ.28,05,600/-(உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படவேண்டும்) |
| 11. அனுமதி தொகை | : | ரூ.10,83,036/- (வரைவேலை எண்.841977, நாள் 23.10.2020)கார்ப்பரேசன்வங்கி,சேலம். |

-2-

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

நிபந்தனைகள்

1. இந்த அனுமதி உத்திரவு கொடுத்த தேதி முதல் 1 வருட காலத்திற்கு அமுலாகிறது.
2. கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டவுடன் வீட்டு வரி ரசீது வழங்கப்படும்.
3. தெருவை அனுமதித்து போட்டிருக்கும் காலியிடத்தில் வடிகள் தவிர எந்த விதமான கட்டிடமும் கூடாது.
4. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்திற்கு மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக் கூடாது.
5. அங்கீகாரம் பெற்ற பிளானுக்கு மாறுதல் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன்கூட்டியே அனுமதி பெற்ற பிறகே செய்ய வேண்டும்.
6. கொடுக்கப்பட்ட தவணைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையெனில் அதற்கு 30 நாட்களுக்கு முன்னதாக மனு கொடுத்து எற்பட்ட கட்டணம் ரூ.1000/- செலுத்தி அனுமதி வரம்பை நீட்டித்துக் கொள்ள வேண்டும்.
7. கட்டிட வேலை நடக்கும் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் ஒன்று துவக்கப்படுவதுடன் ஊராட்சி மன்றத் தலைவர் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர் செய்ய வேண்டும்.
8. கழிவுநீர் கால்வாய் தொட்டி முதலியன சுகாதார முறைப்படி தளம்பாகம் மட்டும் எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான மார்க்கம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.
9. தமிழ்நாடு பொது சுகாதார வட்டம் 26-33 வரை பிரிவுப்படி ஒப்புதல் பெறாமல் மேற்படி கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடி வைக்கவோ கூடாது.
10. கட்டிடம் முடிந்த பிறகு அல்லது குடியேறி 15 நாட்களுக்குள் அது விவரம் ஊராட்சி மன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
11. வீட்டிற்கு முன்னால் எலக்ட்ரிக் லையனுக்கும் கட்டிடத்திற்கும் இடையே உள்ள தூரமும் தரை மட்டமும் நடமாட்டம் இல்லாத பகுதி 10 அடி உயரமும் விட்டு கட்டிடம் கட்ட வேண்டும்.
12. தெருவில் கொட்டி வைக்கப்படும் சாமான்கள் அப்போதைக்கு அப்போதே அப்புறப்படுத்திவிட வேண்டும்.
13. இடம் தங்களுக்கு சொந்தமானதாக இருக்க வேண்டும். இது சம்மந்தமாக கோர்ட் நடவடிக்கை ஏற்பட்டால் ஊராட்சி மன்றம் பொறுப்பளிக்காது.
14. வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒரு மரம் வளர்ச்சி வேண்டும்.
15. மழைநீர் சேகரிப்பு அமைப்பு கட்டாயம் அமைத்திடல் வேண்டும்.
16. ஊராட்சி மூலம் சாக்கடை வசதி செய்து தரப்பட மாட்டாது. அவரவர் இல்லத்தில் தனி நபர் உறிஞ்சிகுழி அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் பொது இடங்களில் கழிவுநீர் வெளியேற்றக் கூடாது.

தலைவர்
கொண்டகரஅள்ளி ஊராட்சி
தருமபுரி ஒன்றியம்

பெறுதல்

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம்,
சேலம் - 636007.

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board
Salem Division, Salem-7



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate